உ

சிவமயம்



# சைவநீதி

# SAIVANEETHI

மலர் 10 | விய - ஆவணி | July - August 2006 | இதழ் 5



உ

சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'



# சைவநீதி

மலர் 10 விய - ஆவணி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 5

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 15

### எலும்பு முறிவு குணமடையவும் முற்பிறப்பு வினைகள் நீங்கவும் உதவும் பதிகம்

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள அரிய தலமாகிய "திருமாகறல்" எனும் பதியில் அருளியது இப்பதிகம். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், "தீவினைகள் தீருமுடனே", தொல்வினைகள் ஒல்கும், வினைகள் அகலுமே, எனச் சம்பந்தப்பெருமான் பாடியுள்ளார். நம்முடைய பழவினைகள் அழிந்தொழிய வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு இன்பமும் துன்பமும் நீங்கும். பிறகே முத்தி நிலை எய்தும். முற்பிறப்பில் செய்த தீவினைகளால் தான் நமக்கு நோய்கள், வறுமை, பகைமை போன்ற துன்பங்கள் வருகின்றன. இத்தீவினைகள் நீங்க இப்பதிகத்தை ஓதினால் கைமேல் பலன் பெறலாம்.

திருமாகறல் பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடுநீள்கொடிகண் மாடமலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல்கவின் எய்தி அழகார்
மலையின் நிகர் மாடம் உயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறல் உளான்
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரிபுன் சடையினுள்
அலைகொள்புனல் ஏந்து பெருமான் அடியை
ஏத்த வினை அகலுமிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ் முழவு காமருவு சீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலையுடை பேணியதன் மேலொர் சுடர்
நாகமசையா அழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
ஏத்தவினை பறையும் உடனே. 3

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்திஎழில்மெய் உள் உடனே
மங்கையரும் மைந்தர்களு மன்னுபுனலாடி
மகிழ்மாகறல் உளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக வேத்தி
வழிபாடு நுகரா எழுமினே. 4

(இதன் தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)

உ
சிவமயம்

# பொருளடக்கம்


1. திருவாசகச் சூழ்நிலையோடு வாழ்வோம் ........ 3
2. குறிக்கோள் சார்ந்த வாழ்வு ........ 7
3. சிதம்பர இரகசியம் ........ 10
4. தந்தை சொல்மிக்க மந்திரமேது ........ 12
5. திருவருட்பயன் ........ 14
6. ஓர் அரிசி ........ 16
7. குமார தந்த்ர ஆகமம் - ஓர் அறிமுகம் ........ 20
8. கனிகளில் கனிந்த கதைகள் ........ 21
9. புலாலுண்ணாமை ........ 24


## நினைவிற் கொள்வதற்கு

விய ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 18.10.2006 | புதன் | மாதப்பிறப்பு |
| 02. | 19.10.2006 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 03. | 20.10.2006 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 04. | 21.10.2006 | சனி | தீபாவளி, அமாவாசை விரதம், கேதார கௌரி விரதம் |
| 05. | 22.10.2006 | ஞாயிறு | ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் |
| 06. | 23.10.2006 | திங்கள் | மெய்கண்ட தேவர் குருபூசை |
| 08. | 25.10.2006 | புதன் | பூசலார் குருபூசை |
| 09. | 26.10.2006 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 10. | 27.10.2006 | வெள்ளி | ஸ்கந்த ஷஷ்டி விரதம், ஐயடிகள் காடவர் கோனார் குருபூசை, ஐப்பசி வெள்ளி |
| 17. | 03.11.2006 | வெள்ளி | பிரதோஷ விரதம், ஐப்பசி வெள்ளி |
| 18. | 04.11.2006 | சனி | திருமூலர் குருபூசை. |
| 19. | 05.11.2006 | ஞாயிறு | பூரணை விரதம், ஐப்பசிப் பரணி, நெடுமாறர் குருபூசை |
| 20. | 06.11.2006 | திங்கள் | கார்த்திகை விரதம், இடங்கழியார் குருபூசை |
| 22. | 08.11.2006 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 25. | 11.11.2006 | சனி | சத்தியார் குருபூசை |


'சைவநீதி' இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள் -



# திருவாசகச் சூழ்நிலையோடு வாழ்வோம்

**பேரறிஞர் முருகவே பரமநாதன்**

**வாசகம் : வசனம், வார்த்தை, சொற்றொடர்**

**வாசகன் : தூதன், ஒற்றன், பேசுவார்**

**வாசக தீட்சை : வாக்குத் தீட்சை**

**வாசக பதம் : வழக்குச் சொல், வெளிப்படை**

**வாசக புத்தகம் : வசன நடையில் பாடங்கள் அமைந்த நூல் உரைநடைப்பனுவல்**

**வாசகப்பா : வாசாப்புப் பாட்டு நாடககாவியம் மதுரைத்தமிழ் பேரகராதி**

**திரு : செல்வம், காண்போர் விரும்பும் அழகு, திருமகள், சிவபதம், மோட்சம், தெய்வத் தன்மை, திருப்பதம்**

மெய்த்திருபதம் மேவென்ற போதிலும் அத்திருத்துறந்தேகன்ற போதிலும் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை வென்றது இராமனது திருமுகச் செவ்வியெனக் கம்பன் பாடினான். திருவுடைமன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டாரே என ஆழ்வார் பாடுகிறார். இந்தத் திரு ஒன்றன்று. ஒரு பொருளின் ஒரு மனிதரின் சிறப்பை உயர்த்திப் பேசப் பயன்படும் சிறந்த பாவனை எனலாம். சடகோபர் அந்தாதி தந்த கம்பர் சேராதன் உளவோ திரு. சேர்ந்தார்க்கு, வேதஞ் செப்பும், பேராயிரம், நறைபெய் துளவத்தாராயிரம், பொன்முடியாயிரம், திருக்குரு கூர்ச்சடகோபன் சொன்ன ஆராவ முதக்கவியோராயிரம் எனப் பாடல் செய்தார். ஆரா அமுதக் கவியோராயிரம் தான் திருவாய்மொழி. இலட்சுமியைச்சிறீயென்பர் வடபாசையில் ஸ்ரீக்குப் பதிதிருமால். அவன் திருமனுமார்பன். தெய்வத்தன்மை கமழும் அநந்த செய்திகள் திருவோடு தொடர்புடையன.

திருப்பதிவைணவபதி திருவாரூர் சைவத்தலம் (உ+ம்) இந்தத் திருவைத் திருநாவுக்கரையர் எழிலாகப் பயன்படுத்தியுள்ளார்.

**'திருக்கோயிலில்லாத திருவிலூரும்**
**திருவெண்ணீ றணியாத திருவிலூரும்'**

அடங்கன்முறை - 7177

**திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்**
**தீவண்ணர் திற மொருகால் பேசாராகில்**
**ஒரு காலும் திருக்கோயில் சூழாராகில்**

ஓசுவனந்தரும் நிலமகளை விவசாயிகள் நிலத்திரு எனப் போற்றுவர். புலவர்களும் புலவர் செம்பனுவல்களும் பக்திப் பாமாலைகளும் நாயன்மாரும் திருவோடிணைந்தே அமைந் துள்ளன. இந்தப் பாணியில் செம் மொழியில் இயன்ற வாசகம் திருவாசகமெனப் பெயரிய தாயிற்று. வாசகம் என்றாற் திருவாசகம். அதற்கு வாச்சியம் (பொருள்) சிவகாமி சமேத நடராசனேயெனத்துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார். (நால்வர் நான் மணிமாலை) வாசகம், வார்த்தை, வாய்மொழி ஒத்ததன்மையன. திருவாசகம் பாடியவர் திருவாதவூரர். அப் பாவண்ணத்தால் இறைவன் ஆளுடையடிகட்கு வழங்கிய தீட்சா நாமம் மாணிக்கவாசகர் (என்பது) நம்மாழ்வாரின் அருளிச் செயல் திருநாலாயிரம். இவரின் இன்னோர் திருநாமம் சடகோபர். இவரே தன் வெளி□ பாட்டைத் திருவாசகம் எனப் பேசியுள்ளார்.

**செயற்கு அரிய யாஉள நட்பின் அதுபோல்**
**வினைக்குஅரிய யாஉள காப்பு** **781**

நட்பைப்போல செய்துகொள்வதற்கு அரிய உறவுகள் வேறு எவை உள்ளன? ஒருவன் மேற் கொண்ட வினை முயற்சியில் பகைவரால் கேடு வராமல் காப்பதற்கு, அதைப்போல அருமையான காவலாக அமைபவை வேறு எவை உள்ளன?

**நெஞ்சமே! நீள்நக ராக இருந்தவென்**
**தஞ்சனே, தண்ணிலங் கைக்கிறையைச் செற்ற**
**நஞ்சனே, ஞாலங் கொள் வான்குறளாகிய**
**வஞ்சனே, என்னுமெப் போதுமென் வாசகமே**

நகரம் - கோயில்

திருநாலாயிரம் 2975

**வாசகமே ஏத்த அருள் செய்யும் வானவர்தம்**
**நாயகனே, நாளிளந் திங்களைக் கோள்விடுத்து**
**வேயகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட**
**ஆனாயர் தாயவனே, என்று தடவு மென் கைகளே**

மேல் 2976

**மொருந்திய மாமரு தின்னிடைபோய வெம்**
**பெருந்த காய், உன் கழல் காணிய பேதுற்று**
**வருந்தி நான வாசகமாலை கொண்டு உன்னையே**
**இருந்திருந் தெத்தனை காலம் புலம்புவனே**

மேல் 2983

தன் பராவமுதான பாத்தொடையை வாசக மாலை யெனப் பேசிய நம் மாழ்வாரின் உளக்கிடக்கையை ஓர்ந்து பார்க்க வேண்டியதே. வசனத்தையே வாசகம் என்று சொல்வது முண்டு. இன்னுமொருவாசகம் உறுதியில் எழுத வேண்டுமென்பர். ஆசிரியர் சொல்லச் சொல்லக் கற்பலகையில் எழுதுவதை அக்கால ஆசான்கள் வாசகம் என்றே சொல்வர். திருவார்த்தையென்றோர் பதிகம் மணிமொழியார் வழங்கியுள்ளார். திருவார்த்தை, திருவாக்கு நிறைமொழி மந்திரம் எனப் பொருள்படும். வாசகம் வாக்கு எனின் ஒன்றே பொருள் செம்பொருளாம் இறைவனைப் பாடிய மண்ணார்ந்த தமிழே திருவாசகம். மணிவார்த்தை என்ற சொல்லை மாணிக்கவாசகர் பயன்படுத்தியுள்ளார். எனவே இறைவனே திருவாதவூரர்க்கு மாணிக்கவாசகர் என்ற திருநாமம் அளித்தார். எனவே நாமெல்லாம் திருவாசகத்தை மணிமொழி எனவும் மாணிக்கவாசகரை மணிமொழியார் எனவும் ஆராமையுடன் அழைக்கிறோம்.

வாக்குன்மணி வார்த்தைக்காக்கி
சதகம் 26 (சிந்தனை)
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசி
பண்டாய நான் மறை 7 (பேசும்)

உயர் தனிச் செம்மொழியென்றும், தன்னேரில்லாத தமிழென்றும், என்றுமுள செந்தமிழ் என்றும் போற்றப்படும் பழந்தமிழை ஊடகமாகக் கொண்டது திருவாசகம். பழுதிலாத சொன்மணியினைப் பத்தி செய்து அன்பால் முழுதுமாகிய வடத்தினால் முறை தொடுத்து அலங்கல் சாத்திய அடியவர்க்கு அகமகிழ்ந்து ஐயன் "வழுவிலாத மாணிக்க வாசகன்" எனப் பெயரிட்டார். ஓசை நயமும் பொருளழகும் கனிவும் நிறைந்த உயர் தமிழ்ச் சொல்லால் இயன்றது இத்திருவாசகம். இதைப் படிப்போர், உணர்வோர், கேட்போர், அனுபவிப்போர் தம்மை மறந்து இறைமயமாகி ஓர் உயர் நிலை காண்பர். வள்ளலார், சிவப் பிரகாசசுவாமிகள், தாயுமானவர் இவருட்சிலர். சுற்றுபுறச் சுற்றாடலின் தூய்மை பற்றியும் மாசுறா வண்ணம் காப்பது பற்றியும் விஞ்ஞானம் வெகுதூரம் ஆய்ந்து விடையும் கண்டுள்ளது. ஆரோக்கியமான வாழ்வுக்கு இது மிகவும் இன்றியமையாதது. இவ்வண்ணம் ஆத்மீக வழிபாட்டுக்கு இட்டுச் செல்லும் ஒரு கையேடு திருவாசகம். சுகாதார வாழ்வை மேற் கொள்வது போல சிவமயமாகத் திகழும் திருவாசகத்தை நம்முடன் இயைத்துக் கொள்ள

**நிரைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு** 782

அறிவுடைய மேலோர் நட்புகள் வளர்பிறைத் தன்மையுடையனவாய் மேன்மேலும் வளர்ந்து வருவனவாம், அறிவில்லாத கீழோர் நட்புகள் தேய்பிறைத் தன்மையுடையனவாய் வரவரத் தேய்ந்து வருவனவாம்.

நல்ல வழிமுறைகளைக் கையாளுதல் உசிதமாம். திருவாசகப் பாக்களை ஈடுபாட்டுடன் ஓதும் பழக்கத்தை வாழ்வில் ஒரு கடமையாய் மேற் கொள்ளல் நன்று. இசையுடனும் பொருள் உணர்ந்தும் காதில் விழும்படியும் ஓதுதல், செவ்விய முறையிலே முற்றோதல் செய்யும் குழுவில் நாமும் இணைந்து கொளல், திருவாசகக் கச்சேரிகள் சமய சொற்பொழிவுகளில் பங்குபற்றல், நல்ல ஓதுவார்கள் சங்கீத மேதைகளின் ஒலிப்பதிவுகளைக் கேட்டல், திருவாசக சொற்பொழிவுகளைச் செவிமடுத்தல், திருவாசகம் பற்றி வெளிவரும் கட்டுரைகள் நூல்களைப் படித்தல், பொருள் விளங்காவிடின் கற்றறிந்தாரிடம் கேட்டறிதல், பல உரை நூல்களை ஆய்வுகளைப் படித்தல், நல்லாசானிடம் பாடம் கேட்டல், தாமே தமக்கு இயைந்த வழி முறைகளைக் கையாண்டு திருவாசக ஆளுமையைப் பெற்றுக் கொள்ளல், பிழையின்றி ஓதுதல், பொருளுணர்ந்து சேவித்தல் போன்ற நெறியாழ்கைகளை நடைமுறைப்படுத்தல், கூட்டு வழிபாட்டில் திருவாசகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தல், சதா திருவாசக நினைவோடு நம் காரியங்களைச் செய்தல், தினமும் மனனஞ் செய்யும் பழக்கத்தை நடைமுறைப்படுத்தல், நமது கைச்சோளியில் திருவாசகம் பேரேட்டை எடுத்துச் சென்று பிரயாணத்திலும் தரித்து நிற்கும் போதும் நூலைப் பிரித்துப் பார்த்தல், நல்ல இதமான சூழ்நிலைகள் மனதுக்கு ரம்மியம் தரும்; அதனால் நாம் மகிழ்கின்றோம்; ஆனந்தத்தை அனுபவிக்கின்றோம்; மன நலமும் இனநலமும் நம்மை உயர்த்தும் மேனிலைப்படுத்தும் பிறரை நேசிப்பது போல பிறரைப் பற்றி யோசிக்கவும் வேண்டும்; நம் திருவாசக அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் வேண்டும்; ஓய்வு நேர வேளைகளிற் திருவாசகத்தைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்ல பயனளிக்கும்; இப்படியான திருவாசக நினைவுகள் நம்மை வளர்த்துப் பிறரையும் ஆன்மீக நெறிக்கு உய்க்கும்.

எம்மனம் அழகை புதுமையை, வியப்பை நன்கு அனுபவித்து இரசிக்கும் கடலோரக் காட்சிகள் நீர் வீழ்ச்சிகள், ஆற்றோரங்கள், பூஞ்சோலைகள், திருவிழாக் காட்சிகள் நாட்டிய நடனங்கள் சங்கீதக் கச்சேரிகள் மனித மனத்தை விருத்தி செய்யும் சூழல்களாகும். அவற்றை அனுபவிப்பதில் மனம் ஈடுபடும்போது ஒரு புத்துணர்வு, மன எழுச்சி, மன அமைதி, நிம்மதி, சாந்தி, சமாதானம் எம்மையறியாமலே ஏற்படுகிறது. எங்கே நிம்மதி எங்கே நிம்மதியெனத் தேடியலைந்தும் காணாமல் சலனப்படுகிறோம். சலனம் போக்கி நிதானமளித்து அமைதியோடு கூடிய சூழலை ஏற்படுத்துவது திருவாசகமாம். தான் பெற்ற அனுபவங்களை தன்னிழப்போடு பாடியவர் திருவாதவூரர். நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை என மணிமொழியாரே தான் பாடவில்லை. அவனுடைய எழுச்சியே என்னைப் பாடவைத்ததெனச் சுட்டிக் காட்டுகிறார். பாடியவர், பாட வைத்தவர், பாட்டு, பாட்டின் பொருளெல்லாமே கூத்தப்பிரானென்ற உண்மையை பாடலில் மெய்த்திருக்கிறார் சுவாமிகள். எனவே சுவாமிகள் நமக்களித்த அனுபவங்கள் அவரின் வேண்டுகோள்கள். கேள்விகள் எமக்கும் பொருத்தமானவையே வைகறையிற் துயிலெழுந்து நித்திய கருமங்களை

> **நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
> **பண்புடை யாளர் தொடர்பு** 783
>
> சிறந்த நூல் கற்கக் கற்க இன்பம் தருவதைப் போல் பண்பட்ட மேலோர் நட்பு பழகப் பழக இன்பம் தரும்.

நிறைவேற்றி நீராடிப் புனித ஆடை தரித்து சுவாமியறையிற் தீபமேற்றி பூவைத்து திருவாசக ஏட்டைப் பூசித்து ஊதுபத்தி ஏற்றி, நல்ல சுகந்த நிலையிலே தினமும் காலை மாலை படிக்கும் பழக்கத்தை வாடிக்கையாக மேற்கொள்ளல் நல்ல சாதனையாம்.

இதுவரை காட்டியவற்றுக்கு அப்பாலும் ஒவ்வொருவரும் தம் சிந்தனைக்கமையத் திருவாசக ஈடுபாட்டை வளர்த்து திருவாசக ஆளுமைகளை வளர்ப்போமாக!

சிவமயமாய் வாழத்
திருவாசக மயமாவோம் ஆழ்கடலான்.

**கொந்து அவிழ் மலர்ச்சோலை நல் நிழல்வைகினும்**
**குளிர்தீம் புனல் கை அள்ளிக்**
**கொள்ளுகினும் அந் நீரிடைத் திளைத்து ஆடினும்**
**குளிர் சந்த வாடை மடவார்**
**வந்துலவு கின்றதுஎன முன்றிலிடை உலவவே**
**வசதி பெறு போதும், வெள்ளை**
**வட்டமதி பட்டப் பகல் போல் நிலவுதர**
**மகிழ்போதும் வேலை அமுதம்**
**விந்தை பெற அறு சுவையில் வந்ததுஎன அமுது**
**உண்ணும்**
**வேளையிலும் மாலைகந்தம்**
**வெள்ளிலை அடைக்காய் விரும்பிவேண்டிய வண்ணம்**
**விளையாடி விழிதுயிலினும்**
**சந்ததமும் நின்அருளை மறவாவரம் தந்து**
**தமியேனை ரஷை புரிவாய்**
**சர்வ பரி பூரண அகண்டதத்துவம் ஆன**
**சச்சிதானந்த சிவமே**

**தாயுமானவர்.**

---

**நமசிவாய**



'பஞ்ச கிருத்திய பரமானந்தத் தாண்டவம்' ஆடும் நடராஜரின் திருவடி நகரம். உதரம், மகரம், தோள், சிகரம், முகம், வகரம், திருமுடி, யகரம், பாதாதி கேசமாகப் பார்த்தால் அவரது திருவுருவம் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகும்.

அதேபோல உடுக்கை, சிகரம், வீசிய திருக்கரம், வகரம், அபய கரம், யகரம், அக்கினி நகரம், முயலகன் மகரம் என்று தியானித்தால் 'சிவாய நம' என்னும் ஐந்தெழுத்தாக' நடராஜப் பெருமான் காட்சி தருகிறார்.

---


## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

**தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு**
**ரூபா 250.00 ஏனைய நாடுகளில்**
**ஆண்டொன்றிற்கு**
**ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது** US$ 15

***சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.***

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

***C. Navaneethakumar,***
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 0779008286*


---

**நகுதற் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு** **784**

ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்வது, தாம் கூடிப் பேசி மகிழ்வதற்கு அன்று. இருவருள் ஒருவர் நெறி கடந்து செல்லும் போது இன்னொருவர் முற்பட்டுக் கடிந்துரைத்துத் திருத்துவதற்கே ஆகும்.

# குறிக்கோள் சார்ந்த வாழ்வு

தஞ்சை மாவட்டத்தில் மண்ணியாற்றங் கரையில் திருச்சேய்ஞலூர் என்ற ஒரு சிற்றூர் உள்ளது. இயற்கை வளம்கொழிக்கும் ஊர் அது. வேத ஆகம சாத்திரங்கள் பயின்ற அந்தணர்கள் - நித்திய வேள்வி இயற்றும் சீலமுடைய அந்தணர்கள் பலர் வாழ்ந்த ஊர். திருச்சேய்ஞலூர்க் கிராமத்தில் வேள்வி குண்டப்புகை அணைந்ததே இல்லை.

இந்த ஊரில் எச்சதத்தர் - பவித்திரை என்ற தம்பதியருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிள்ளையின் திருநாமம் விசார சருமர். அவர் இளமையிலேயே வேதங்களின் ஆறங்கங்களில், சைவாகமங்களில் வியக்கத்தக்க அறிவு பெற்றிருந்தார்.

விசாரசருமருக்கு முறைப்படி முப்புரிநூல் அணிவித்தல், வேதங்களில் பயிற்சி தொடங்குதல்.
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

முதலிய சடங்குகள் நடைபெற்றன. விசாரசருமர் வாழ்க்கையின் இயல்பையும் குறிக் கோளையும் உணர்ந்தார். சிவத்தைப் பூசிக்க வேண்டும் என்று தெளிந்தார். அறிந்து கொண்டார்.

ஒரு நாள் மண்ணியாற்றங்கரையில் தன்னையொத்த பிள்ளைகளுடன் பசுக் கூட்டத்துடனும் சென்ற பொழுது ஒரு பசு தன்னை மேய்ப்பானை முட்டப் போயிற்று. மேய்ப்பான் தற்காப்பு அடிப்படையில் அந்தப் பசுவைக் கண்டபடி அடித்துவிட்டான். இது கண்ட விசாரசருமர் மிகுந்த வேதனையுற்று மேய்ப்பானிடமிருந்து அடிபட்ட பசுவை மீட்டார்.

"பசுவை அடிக்கலாமா? நாளும் பால்சொரிந்து உயிர்க்குலத்தையும் பூசை முறைகளையும் வளர்க்கும் பசுவல்லவா?" பசுவின் உடம்பே புண்ணியத்தின் புதையல்" என்றெல்லாம் அறிவுரை கூறினார்.

அதுமட்டுமின்றி, "இனி நீ பசுக்களை மேய்க்க வேண்டாம். நானே மேய்த்துக் கொள்கிறேன்" என்று கூறி அந்த அந்தணச் சிறுவர் பசுமேய்க்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். செய்யும் தொழிலுக்குச் சாதிகள் தடையில்லை என்பது பழைய மரபு.

அன்று முதல் பசுக்களை மேய்க்கும் பொறுப்பை விசாரசருமர் சிறந்த முறையில் செய்தார். பசுக்கள் மகிழ்ச்சியாக இருந்தன. நிறைய பாலும் கொடுத்தன.

விசாரசருமர் பசுக்களை மிக நன்றாக வளர்த்தமையால் பசுக்கள் தாம் ஈன்ற கன்றுகளைப் பிரிய நேரிட்ட பொழுதும் வருந்தவில்லை. ஆனால் விசாரசருமரை ஒரு நொடிப்பொழுதும் பிரிய ஒருப்படவில்லை. விசாரசருமரை நினைத்தாலே பால் பொழியும் அளவுக்குப் பசுக்களின் நிலை வந்து விட்டது.

பசுக்கள் தாமே பொழியும் பாலைச் சிவபெருமானுக்கு முழுக்காட்ட விசாரசருமர் எண்ணினார். ஆதலால் மண்ணியாற்றின் மணலில் ஒரு சிவலிங்கத் திருமேனியை எழுந்தருளச் செய்து அந்த மூர்த்திக்குப் பசுக்கள் தாமே பொழிந்த பாலைத் திருமுழுக்காட்டினார். இது நாள்தோறும் நடைபெறும் பழக்கமாயிற்று.

இங்ஙனம் பால் சுரந்தமையால் வீட்டிலும் பசுக்கள் தந்த பால் குறையவில்லை. இருப்பினும் ஊர் சும்மா இருக்குமா?

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும்** 785

ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்வதற்கு ஓரிடத்தில் கூடுவதும், பலமுறை கண்டுபேசி உறவாடுவதும் வேண்டியதில்லை இருவருக்கும் ஒத்த உணர்ச்சியே நண்பர் ஆவதற்கு உரிய உரிமையைத் தரும்

ஒருவன், விசாரசருமா் சிவத்தினை எழுந்தருளச் செய்து பால் முழுக்காட்டுவதைப் பசுக்களுக்குரிய அந்தணா்களிடம் கூறிவிட்டான். அந்தணா்களுக்கு யாதொரு இழப்பும் இல்லை. அவா்களுக்குக் கறந்த பாலில் யாதொரு குறைவும் இல்லை. அப்படியிருந்தும் சபையில் விசாரசருமா், விசாரசருமரின் தந்தையை அழைத்து, விசாரசருமரின் அடாத செயல் பற்றிக் கூறினாா். விசாரசருமரின் தந்தை எச்சதத்தா் தவறு நிகழ்ந்திருக்காது என்றும் அப்படி நிகழ்ந்திருந்தால் அதற்குத் தாமே பொறுப்பேற்பதாகவும் உறுதி கூறினாா்.

மறுநாள் விசாரசருமா் வழக்கம்போல் பூசையில் அமா்ந்தாா். பூசை செய்தாா். தம்முன் எழுந்தருளியிருந்த இறைவனுக்குப் பால் முழுக்காட்டினாா். இச்செயலை ஒளிந்திருந்து பாா்த்துக்கொண்டிருந்த எச்சதத்தா் - விசாரசருமரின் தந்தை - வெகுண்டு தடித்த கோலினால் விசாரசருமரை அடித்தாா். விசாரசருமரின் சிவயோகம் கலைய வில்லை.

எச்சதத்தா் தீராத வெகுளியால் பால் முழுக்காட்டுக்கு என்று வைத்திருந்த பாற்குடத்தைத் தமது காலால் இடறி விடுகிறாா். விசாரசருமரின் சிவயோகம் கலைகிறது. சிவ பூசைக்கு உற்ற இடா்பாட்டைச் சடுதியில் உணா்கிறாா். பாற்குடத்தை உதைத்த கால்களை வெட்டி விடுகிறாா். எச்சதத்தா் கால்களை இழந்து வீழ்ந்தாா். சிவபெருமான் அம்மையப்பராக எழுந்தருளிக் காட்சி தந்தருளி, தாம் உண்பனவும் உடுப்பனவும் பெரும் சண்டேசுவரா் என்னும் பதந்தந் தருளினாா்.

இந்த வரலாறு தரும் படிப்பினைகள் பலபல. முரண்பாடுகளும் உடைய வரலாறு இது.

பசுக்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை என்ற பாடம் மிக மிக முக்கியம். பசு இந்த நாட்டின் செல்வம்.

பசுக்களை முறையாக வளா்க்க வேண்டும். பசும்புல் மேயவிடுதல், நறுநீா் குடிக்க தருதல், குளிா் நிழலில் படுத்து இளைப்பாறச் செய்தல் ஆகியன. பசுப் பாதுகாப்புக்கு முக்கியம் இத்தகைய ஏற்பாடுகள் இன்று நமது நாட்டில் இல்லை. நாம் பசுக்களை வணங்கக் கற்றுக் கொண்டிருக்கிறோமே தவிர, வளா்க்கக் கற்றுக் கொள்ளவில்லை.

குடம் குடமாகப் பால் கறக்கும் இந்தியப் பசுக்கள் இன்று உழக்கு அளவிலேயே கறக்கின்றன. பசுக்களில் அயல் நாட்டின் மோகத்தால் உள் நாட்டினம் அருகிப் போய்க்கொண்டிருக்கிறது. பசுக்களில் நமது மரபு வழி வந்த இனப் பசுக்களையே முறையாக வளா்க்க வேண்டும். எனவே, கிராமந்தோறும் முறையாக அமைந்த மேய்ச்சல் தரைகள் தேவை.

மனிதக் கூட்டம் தமக்கு இழப்பில்லையானாலும் மற்றவா்கள் ஒன்றை அனுபவிக்கவிட மாட்டாது. அதனாலேயே அடிமைத் தனத்தின் துா்க்குணமாகிய பொறாமை மனித குலத்தை விட்டு அகலவில்லை. இன்று உலகம் முழுதும் வாழும் மக்கள் உண்டு மகிழப் போதிய உணவு உண்டு. ஆனாலும் பஞ்சம் இருக்கிறது. தனி மனிதனின் பேராசையே பஞ்சத்திற்குக் காரணம்.

விசாரசருமா் இறைவனுக்குப் பால் முழுக்காட்டியதில் பசுக்களின் சொந்தக்காரா்களுக்கு யாதோா் இழப்பும் இல்லை. அவா்களுக்குக் கிடைத்த பாலில் குறைவும் ஏற்படவில்லை. ஆயினும் விசாரசருமரின் வழிபாட்டிற்கு இடையூறு செய்கின்றனா். இதுதான் மனிதனின் விபரீத புத்தி.

❀

**முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு** 786

முகம் மட்டும் மலர நட்பது நட்பாகாது, அன்பால் உள்ளமும் மலருமாறு நட்பதே உண்மையான நட்பாகும்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட
மாடமலி மாகறல் உளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர் மழுவாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடியாரை
நலியா வினைகளே. 5

மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகையால் இனி திறைஞ்சி
இமையோரில் எழு மாகறல் உளான்
மின்னை விரி புன்சடையின் மேல் மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்க உயர்
வானுலகம் ஏறல் எளிதே. 6

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரிகானல்மது வார்கழனி
மாகறல் உளானெழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சி
அடையாவினைகள் அகலுமிகவே. 7

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன் மாடமிசையே
மாசுபடு செய்கை மிக மாதவர்கள்
ஓதி மலி மாகறல் உளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடியீசன் என ஏத்தவினை
நிற்றல் இல போகும் உடனே. 8

தூய விரி தாமரைகள் நெய்தல்
கழுநீர் குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசை பயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மைகெட நின்ற பெருமான்
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள்வினை
யாயினவும் அகல்வதெளிதே. 9

காலினல பைங்கழல்கள் நீள் முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலும் மலரானும் அறியாமை எரியாகி
உயர் மாகறல் உளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும் விடையூர்தியுடை அடிகள் அடி
யாரை அடையாவினைகளே. 10

கடைகொள் நெடுமாடமிக ஓங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யால் பரவி அரனையடி
கூடுசம் பந்தனுரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர் வாரவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

திருச்சிற்றம்பலம்

**அழிவினவை நீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு** 787

நண்பன் கேடு தரும் தீய வழிகளில் நடக்கும் போது அவற்றிலிருந்து விலக்கி, நல்ல வழிகளில் நடக்கச் செய்து, தெய்வத்தால் கேடு வந்த போது அதை நீக்க முடியாமையால், அத்துன்பத்தைத் தானும் உடன் நுகர்ந்து வருந்துவதே நட்பாம்.



# சிதம்பர இரகசியம்

**வைணவர்களுக்கு ஸ்ரீ ரங்கம்!**
**சீக்கியர்களுக்குப் பொற்கோயில்!**
**கிறிஸ்துவர்களுக்கு ஜெருஸலேம்!**
**முகமதியர்களுக்கு மெக்கா மதினா!**
**இந்துக்களுக்கு காசி!**

இவைகள் எவ்வளவு சிறப்பான இடங்களாகக் கருதப்படுகிறதோ அதுபோல் சைவ சமயத்தவர்களுக்குக் கோயில் என்றால் சிதம்பரம் நடராஜர் கோயில்தான் சிறப்பானது. பெருமைக்குரியது.

பஞ்சபூத சிவஸ்தலங்களில் சிதம்பரம் ஆகாயம் என்ற சிறப்புப் பெறுகிறது.

இந்தக்கோயில் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

சிதம்பரம் கோயிலின் சிறப்புக்கு அதன் நான்கு பக்க கோபுரங்கள்தான் காரணம்.

கிழக்கு கோபுரம் விக்கிரம சோழ மன்னனால் கட்டப்பட்டது. இந்த கோபுரத்தின் பெரும் சிறப்பு 108 பரத நாட்டியக்கலையின் முத்திரைகளை சிலைகளாகச் செதுக்கி இந்த நாட்டிய சிலைகளை கோபுரத்தின்மீது பதித்துள்ளார்கள்.

மேற்குகோபுரம் சடையவர்ம சுந்தரபாண்டிய மன்னனால் கட்டப்பட்டது.

தெற்கு கோபுரம் பல்லவ மன்னனால் கட்டப்பட்டது.

வடக்கு கோபுரம் விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது.

சிதம்பரம் நடராஜப் பெருமானின் கோயில் கோபுரங்கள் சோழ, பாண்டிய, பல்லவ மற்றும் விஜயநகர மன்னர்களால் கட்டப்பெற்று பெரிதும் சிறப்பிக்கப்பட்டது என்று சரித்திரக் குறிப்புகள் நமக்கு அறிவிக்கின்றன.

“சிதம்பரம் கோயிலின் கனகசபையின் மண்டபம் பதினெட்டுத் தூண்களைக் கொண்டது.

இந்து சமயத்தின் ஆதாரமாக இருக்கும் வியாசர் எழுதிய 18 புராணங்கள் இந்த கனக சபையின் மண்டபத் தூண்களாக நிற்கின்றனவா என்று நாம் நினைக்கின்றோம். வியக்கின்றோம்.

பொன்னம்பலம் என்று போற்றப்படும் நடராஜர் சன்னிதியின் மேல்கூரை முழுவதும் தங்கத்தினால் ஆனது.

ஆடல் அரசனின் சன்னிதியின் மேல்கூரை 64 சட்டங்கள் (மரங்கள்) கொண்டது.

ஆயகலைகள் 64 அல்லவா? கலைகள் அனைத்தும் கலை வேந்தனுக்குக் கூரையாக அமைந்துள்ளதோ என்று நாம் நினைக்கின்றோம். அதிசயிக்கின்றோம்.

நடராஜப் பெருமான் சன்னதி மேல்கூரை தங்க ஓடுகளால் ஆனது. “தங்க ஓடுகள் அனைத்திலும் ‘சிவாய நம’ என்று பொறிக்கப் பட்டுள்ளது.” என்று ‘தில்லை உலா’ கூறுகின்றது.

கூரையில் உள்ள தங்க ஓடுகள் மொத்தம் எத்தனை தெரியுமா?

**உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு** 788

ஆடை அவிழ்ந்தவனுடைய கை, உடனே சென்று திருத்தி மானக்கேட்டை நீக்குவது போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது, அப்பொழுதே சென்று உதவி, அதை நீக்குவதே உண்மையான நட்பாம்.

'சிவாய நம' பொறிக்கப்பட்ட 21,600 தங்க ஓடுகள்.

நாள் ஒன்றுக்கு ஒரு மனிதன் சுவாசிக்கும்போது விடும் மூச்சின் எண்ணிக்கை என்ன தெரியுமா?

ஒரு மனிதன் தினம் தினம் 21,600 முறை சுவாசிக்கிறான் என்று மருத்துவக் குறிப்புகள் கூறுகின்றன.

இதில் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சுவாசிக்கும் போதெல்லாம் 'சிவாய நம' 'சிவாய நம' என்று தான் சுவாசிக்க வேண்டும் என்ற அற்புதமான தத்துவத்தை நடராஜர் சன்னி தியின் மேல் கூரையின் தங்க ஓடுகள் நமக்குத் தெளிவாகப் பாடம் சொல்லிக் கொடுக்கின்றன.

21,600 தங்க ஓடுகள் 64 மரங்களில் (இணைக்க) பொருத்த அடிக்கப்பட்ட ஆணி களின் மொத்த எண்ணிக்கை என்ன தெரியுமா?

72,000 ஆணிகள்.

மனித உடலில் மொத்த நாடி நரம்புகள் எத்தனை தெரியுமா?

72,000 நாடி நரம்புகள் என்று மருத்துவ மேதைகள் தெரிவிக்கின்றனர்.

பொன்னம்பலத்தின் கூரையின் தங்க ஓடுகள் மனிதனின் மூச்சையும், தங்க ஓடுகளை இணைத்த ஆணிகளின் எண்ணிக்கை, மனிதனின் நாடி நரம்புகளையும் ஒத்து இருக்கும் அதிசயத்தையும், நம் முன்னோர்கள் அறிவாற்ற லையும் எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

மனித உடலே ஆலயம் என்ற தத்துவத்தை வருங்கால சந்ததியர் அறிய நமது முன்னோர்களின் ஞான ஒளி எவ்வளவு பிரகாசமானது? இத்தனை அறிவாற்றல் மிக்க முன்னோர்களின் வழிவழி வந்தவர்கள் நாம் என்று எண்ணும்போது மெய்சிலிர்க்கிறோம்.

பொன்னம்பலத்தின் கூரையின் மீது இருக்கும் ஒன்பது கலசங்களைக் காணும்போது இரத்தினங்கள் ஒன்பது; அதாவது நவரத்தினங்களை நினைவுபடுத்துகின்றதா!

பரமேஸ்வரன் உலகை பரிபாலனம் செய்ய கிரகங்களை நியமித்தார் என்று சொல்வார்களே, அந்த நவக்கிரகங்களை நினைத்து ஒன்பது கலசங்களை அமைத்தார்களா?

மனித உடலுக்கு ஒன்பது வாசல்கள் இருக்கிறது. அந்த ஒன்பது ஓட்டைகளைக் கொண்ட உடல் என்னும் கூட்டில் வாழுகிறதே உயிர், இந்த அதிசயத்தை நினைத்துத்தான் ஒன்பது கலசத்தை அமைத்திருப்பார்களோ?

பொன்னம்பலத்தின் பல அம்சங்களைக் கண்டு நாம் வியக்கின்றோம்

ஆகாயத்தின் கீழே எல்லாம் இருக்கின்றன. எல்லை இல்லாதது ஆகாயம். முடிவில்லாதது ஆடும் நடராஜனின் நடனம்.

பத்து தங்கத் தூண்களின்மேல் நடராஜப் பெருமான் இருக்கின்றார்.

சிவபுராணங்கள் பத்தும் இங்கே தங்கத் தூண்களாக நின்று நடராஜரின் நடனத்தைக் காண்கிறதோ!

ஆகாயம் எல்லை இல்லாதது. ஆடல் அரசனின் நடனம் முடிவில்லாதது.

உலகில் இயக்கங்கள் அனைத்தும் நடராஜனின் நாட்டியத்தில் ஐக்கியமே என்ற ரகசியம்தான் சிதம்பர ரகசியமோ!. ❁

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி**
**ஒல்லும் வாய் ஊன்றும் நிலை** 789

நட்பிற்குச் சிறந்தநிலை எது என்றால், ஒருபோதும் வேறுபடாமல் இயன்ற வழியெல்லாம் தன் நன்பனுக்கு உதவி செய்து, அவன் எவ்வகையிலும் தளராதபடி தாங்கும் உறுதியாம்.

# தந்தை சொல்மிக்க மந்திரமேது

கணவனே கண்கண்ட தெய்வமாக மதித்து வாழ்ந்தவள் அந்தப் பெண்மணி. மிகவும் அழகு பொருந்தியவள். அவளது கணவரோ, வேத சாஸ்திரங்கள் அனைத்தும் அறிந்த மாமுனிவர். குரு குலம் அமைத்துக் கொண்டு தன் குடும்பத்துடன் மாணாக்கர்களையும் பராமரித்து, வேதங்களை கற்பித்து வந்தவர். முனிசிரேஷ்டரான அவரது பெயர் ஜமதக்னி. அவள் பெயர் ரேணுகா.

அனுதினமும் விடியற்காலையில் கணவர் துயில் எழுவதற்கு முன்பே எழுந்து, பர்ணசாலையின் முன் வாசலைச் சுத்தம் செய்து கோலமிட்டுவிட்டு, கணவரின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து விட்டு, அதன் பின்னர் ஆற்றங்கரை நோக்கிச் செல்வாள். பகலவன் விடிவெள்ளி தோன்றும் நேரம் ஆற்றில் நீராடிவிட்டுக் கரைக்கு வந்தவுடன், ஆற்று மணலைக் கைகளால் பிசைந்து ஒரு குடத்தை வடிவமைப்பாள். கற்புத் தெய்வமாகத் திகழ்ந்த அவள் கைப்பட்டவுடனேயே, ஆற்றுமணல், குடமாக உருவெடுக்கும். பிறகு அந்தக் குடத்திலேயே ஆற்று நீரை நிரப்பிக் கொண்டு பர்ணசாலைக்குத் திரும்பி வருவாள். இப்படிப் பல காலம் தொடர்ந்து வந்தது. அப்படியிருக் கையில் ஒருநாள் பொழுது புலரும் நேரம் நெருங்கிவிட்டது. ரேணுகாவும் தனது கடமைகளை நிறைவேற்றிட அவசர அவசரமாகப் புறப்பட்டாள். வாயிற்படியைத் தாண்டும்போதே, படி தடுக்கியது. 'என்று மில்லாது இன்றைக்கு ஏன் இப்படி? என்று எண்ணியவாறே ஆற்றை நோக்கிப் புறப்பட்டாள். சற்றே கலங்கிய மனத்துடன் வானத்தை நோக்கியே சிந்தித்தவாறு நடந்து சென்ற அவள், ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள். வானத்தில் அவள் கண்ட காட்சி, அவளை பிரமிக்க வைத்தது. - ஒளி வட்டம் பிரகாசித்த வண்ணம் கந்தர்வன் ஒருவன் வானவீதியில் பறந்து செல்வதை அவளது கண்கள் கண்டன. இதுநாள் வரை தனது பாதங்களைப் பார்த்தவாறே குனிந்த தலை நிமிராது சென்று கொண்டிருந்த அவளுக்கு அந்தக் காட்சி மனதைப் பற்றி இழுத்தது. ஒரு கணம் உற்று நோக்கிட, அந்த கந்தர்வனின் அழகு சொரூபம் அவளது சிந்தையில் உறைத்தது. ஆகா! என்ன அழகு! எத்தனை கம்பீரம்! இப்படி ஒரு சில சிந்தனைகள் அலையோடின. சட்டென தன் நிலை குலைந்ததை உணர்ந்து பதறிப் போனாள். ஏற்கனவே வாயிற் படி தடுக்கியதை அபசகுனமாக எண்ணிய அவள் எண்ணங்களை இப்படிச் சிதறவிட்டதால் என்ன இடுக்கண் வருமோ என சற்று பதறினாலும், கடமையே கண்ணாக, ஆற்றில் நீராடிவிட்டு மண்ணைப் பிசைந்தாள். குடம் வடிவமையாமல் உருக் குலைந்தது. பலமுறை முயன்றாள். பலன் இல்லை பொழுது முற்றிலும் விடிந்து விட்டது. பர்ணசாலைக்குத் திரும்ப வேண்டும். வெறுங்கையுடன் எப்படிப் போவது? இப்படி ஒரு சிந்தனையில் மனங் குமுறி நின்றாள்.

அதே நேரம் அங்கே ஜமதக்னி முனிவர் கண் விழித்துக் கொண்டார். ரேணுகா இன்னமும் திரும்பி வரவில்லையே எனக் கவலை கொண்ட அவரது ஞான திருஷ்டியில் ஆற்றங்கரையில் நிகழ்ந்த சம்பவங்கள்

**இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல் என்னும் நட்பு** 790

இவர் எமக்கு இத் தன்மையானவர், நாம் இவர்க்கு இத் தன்மையுடையோம் என்று சொல்லி ஒருவரை ஒருவர் பாராட்டினாலும் நட்பானது தன் பொலிவை இழக்கும்.

தொடர்ச்சியாகக் காட்யளித்தன. ஒரு கணத்தில் 'பதி விரதா தர்மத்தைத்' துறந்து விட்டாளே, கணவனின் முகத்தைத் தவிர வேறு எவரையும் இன்றுவரை ஏறெடுத்துப் பார்த்திடாத தனது பத்தினி, ஒரு கந்தர்வனின் அழகில் மயங்கி நிலை குலைந்து விட்டாளே என்று உள்ளத்தில் குமுறினார். அந்தக் குமுறலே கோபாக்னியாக வெளிப்பட்டது.

உடனே, 'பரசுராமா!' என, தனது மகனைக் கூவி அழைத்தார். பாலகன் பரசுராமன் பணிவோடு வந்து நின்றான். 'எதற்காக அழைத்தீர்கள் தந்தையே? என வினவினான். 'நீ உடனே நதி தீரம் சென்று, உனது தாயின் தலையை வெட்டி விட்டு வா!' என மகனுக்குக் கட்டளையிட்டார் ஜமதக்னி.

'எதற்காக அன்னையைச் சிரச்சேதம் செய்ய வேண்டும்? அவள் என்ன தகாத குற்றம் புரிந்தாள்!' என்றெல்லாம் விளக்கம் ஏதும் கேட்காமல், சட்டெனத் தனது ஆயுதமான பரசுதனை (கோடரி) எடுத்துக் கொண்டு சென்று, ஆற்றங்கரையில் அழுது கொண்டு நின்றுகொண்டிருந்த அன்னையின் தலையை வெட்டி விட்டுத் தந்தை சொல்லைக் காத்திட்ட அதே நேரத்தில் தாயைக் கொன்ற மகாபாதகத்தைச் செய்து விட்டோமே என்று கண்ணீரும் கம்பலையுமாகத் திரும்பி வந்தான் பரசுராமன்.

தனது சொல்லைத் தட்டாமல் நிறைவேற்றிய தனயனைத் தழுவிக் கொண்டார் ஜமதக்னி. "குழந்தாய்! உனது செயலால் நான் மகிழ்ந்தேன். என்ன வரம் வேண்டும்? கேள்!" என்று கூறினார்.

"எனக்கு, எனது தாயை மீண்டும் உயிர்ப்பித்துத் தரவேண்டும், ஐயனே!" என்று பணிவுடன் கோரினான் பரசுராமன். தனயனின் தாயன்பு கண்டு மெய்சிலிர்த்தார் ஜமதக்னி. 'அப்படியே ஆகுக!' எனக் கூறி ரேணுகாவை மன்னித்து மீண்டும் உயிர்ப்பித்தார்.

இதுதான் பரசுராமனின் இளம் பருவக் கதை இவர், தனது தந்தை ஜமதக்னியை கார்த்தவீர்யார்ஜுனன் என்ற அரசன் கொன்றதற்குப் பழி தீர்க்கும் பொருட்டு, அரச குலத்தையே அழித்துவிட, பிரதிக்ஞை செய்து பல நூற்றுக்கணக்கான அரசர்களை வதம் செய்தவர். எங்கு சென்றாலும் அவரது கோபக்கனல் முன்னே செல்லும், அதுவே பெருங்காற்றாகவும், பூகம்பமாகவும் வெளிப்படும்.

திருமாலின் அவதார புருஷர்களில் ஒருவரான பரசுராமன், ராமனிடம் தலைகுனிய நேரிட்டது. மகாபாரத நாயகர்களில் ஒருவனான கர்ணன், அந்தண வேடமணிந்து அவரிடம் வில்வித்தை கற்றான். பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகிக்கும் முறையையும் கற்றுக் கொண்டான். அவன் அந்தணன் அல்லன் என அறிந்து கொண்ட பரசுராமர், உரிய நேரத்தில் அந்த பிரம்மாஸ்திரம் அவனுக்குப் பயன்படாது போகுமென சாபம் அளித்தார். இதுவே பரசுராம சரிதம்.

இத்தனை பெருமைகளைக் கொண்ட பரசுராமரைப் பெற்றெடுக்க, ஜமதக்னி முனிவர் வேண்டி வழிபட்ட ஆலயம்தான் பரசுநாதர் திருக்கோவில். மேற்கு நோக்கி அமைந்த ஆலயம். திருமலைராஜன் நதி இந்தத் தலத்திற்கு தெற்கில் பாய்ந்தோடுகிறது.

பூவுலகே போற்றும் அவதாரமான பரசுராமரை, ஜமதக்னிக்குத் தந்திட்ட பரசுநாதரே மூலவர். எட்டுப் பட்டை கொண்ட உயர்ந்த பாணத்துடன் கம்பீரமாகக் காட்சி தருகிறார். தெற்கு நோக்கிய சந்நதியில், அறிவுக் கண் திறக்கும் அன்னையாக ஞானாம்பிகை அருள்பாலிக்கிறாள். வெளிப்பிரகாரத்தில் உமையொரு பாகன், அண்ணாமலையார் போன்ற மூர்த்திகள் உள்ளனர்.

**நன்றி - பக்தி**

# திருவருட்பயன்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்

## ஆறாம் அதிகாரம் அறியுநெறி

### இருவினையொப்பும் சத்திநிபாதமும்

**நீடு மிருவினைகள் நேராக நேராதல்**
**கூடுமிறை சத்தி கொளல்.**

பதவுரை: நீடும் இருவினைகள் - வளர்த்து வருவனவாகிய வினைகள் இரண்டும், நேர் ஆதல் - (விலக்கப்பட வேண்டிய முறையால்) ஒத்ததன்மைய என்ற எண்ணம் (நேர் - நிகர்), நேர் - ஆக (ஆன்மாவுக்கு) உண்டாக (நேர்பட), இறை சத்தி கொளல் கூடும் - சிவபெருமானுடைய திருவருட் சத்தி பதியும்.

### ஆறு பொருள்கள் அநாதி

**ஏக னநேக னிருள்கரும மாயையிரண்**
**டாகவிவை யாறாதி யில்.**

பதவுரை: ஏகன் - ஒருவராகிய கடவுளும் அநேகன் - அளவில்லாதனவாகிய ஆன்மாக் களும், இருள் - ஆணவமலமும், கருமம் - கர்மமலமும், மாயை இரண்டு - சுத்தம் அசுத்தமென்னும் இருவகை மாயைகளுமாகிய, ஆக இவை ஆறு ஆதி இல். இந்த ஆறு பொருள்களும் அநாதியான பொருள்கள்.

### ஆறு பொருள்களுக்குமுள்ள தொடர்பு

**செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனும் சேர்ப்பவனும்**
**உய்வா னுளனென் றுணர்.**

பதவுரை: செய்வானும் கருமங்களைச் செய்யும் புருடனும், செய்வினையும் - செய்யப்படும் நல்வினை தீவினைகளும் சேர்பயனும் - அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும் சேர்ப்பவனும் - அவற்றை அனுபவிக்கப் பண்ணுங் கடவுளுடைய திருவருளும் ஆகிய இந்த நான்கையும், உய்வான் உளன் என்று உணர். (தன்னை) ஈடேற்றுதற்காகப் பொருந்துபவன் ஆன்மா என்று அறிவாயாக.

### கடவுள் ஆன்மாவுக்கு உயிராய் நிற்றல்

**ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனொடுயிர்**
**தானுணர்வோ டொன்றாந் தரம்.**

பதவுரை: ஊனொடு உயிர் - உடம்பொடு சேர்ந்த ஆன்மா, உணர்வோடு ஒன்றாம் தரம் - ஞானத்தோடு கூடி ஒன்றுபட்டு நிற்கும் தன்மை, ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து - உடம்பானது உயிரோடு கூடி வாழும் ஒற்றுமையைப் போல்வது.

### கடவுள் உயிருக்குயிராய் நின்று நடத்தும் முறைமை

**தன்னிறமும் பன்னிறமுந் தானாங்கற் றன்மைதரும்**
**பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.**

பதவுரை: பல் நிறமும் - (பளிங்கோடு சேர்ந்த பொருள்களின்) பலவகையான நிறங்களையும், கல் தானாம் தன்மை - பளிங்கினுடைய இயல் பான நிறத்தையும், தன்னிறமும் - தன்னுடைய பிரகாசத்தையும், தரும் - தருவதாகிய, பொன்னிறம் போல் - பொலிவாகிய சூரியகிரணம்போல, மன் நிறம் - (மலங்களை முதிர்விக்கும் திரோதான சத்தியின் பிரகாசத்தையும் மலங்கள் நீங்கிய பின்பு ஆன்மாவை விளக்குஞ் சிற்சத்திப் பிரகாசத்தையுந் தந்து இவற்றுக்கப்பால் தன்னுடைய பிரகாசத்தோடு நிற்பதுமான) கடவுளுடைய திருவருளாகிய சோதியை உடையது. இப்பூ - இந்தப்பூமியானது.

## மெய்ப்பொருளைக் காண்பதற்கு ஞானம் வேண்டும்

**கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி**
**யுண்டில்லை யல்லா தொளி.**

பதவுரை: கண் உயிர் நாப்பண் உண்டு. (ஒளியுடைய) கண்ணானது (பொருளுக்கும் ஆன்மாவுக்கும் நடுவே உள்ளது. (அது), கண்டு - (ஒரு பொருளை) உற்றுப் பார்த்து, ஒல்லை காணும் நெறி - அதை விரைவில் உணருதற்கு வழியாகின்றது. (அதுபோல), ஒளி, உயிர் நாப்பண் உண்டு - ஞான ஒளியானது உயிருக்கும் (மெய்ப் பொருளுக்கும்) நடுவில் உள்ளது. (அது), கண்டு - மெய்ப்பொருளைக் கண்டு, ஒல்லை காணும் நெறி - அதை விரைவில் உணரு வதற்கு வழியாம்; ஒளி அல்லது இலலை - திருவருளாகிய ஞான ஒளி இல்லையாயின் மெய்ப்பொருளைக் காணுதலில்லையாம்.

## ஆன்மா தன் செயலைச் சிவன் செயலாகக் கருத வேண்டும்

**புன்செயவி னோடும் புலன்செயல்போ னின்செயலை**
**மன்செயல தாக மதி.**

பதவுரை: புன்செயலின் ஓடும் புலன் செயல்போல் - இழிவான செய்கைகளிலே செல்லும் இந்திரியங்களின் செய்கைகள்ளை உன்னுடைய செய்கைகளாக நீ கருதியது போல, நின் செயலை - உன்னுடைய செயலை, மன் செயல் ஆக மதி - கடவுளுடைய கிரியாசத்தியின் வழியே நடப்பதாக எண்ணிக்கொள்.

## ஞானத்தைக் காணும் முறைமை

**ஓராதே யொன்றையுமுற் றுன்னாதே நிமுந்திப்**
**பாராதே பார்த்ததனைப் பார்.**

பதவுரை: ஒன்றையும் ஓராதே - ஞானம் எப்படியிருக்கும், எவ்வாறு வரும் என்று நீ ஆராயாதே, உற்று உன்னாதே - (உலகப் பொருள்களைக் குறித்து நினைப்பது போல) அதைப் பற்றிச் சற்றேனும் நினையாதே, நீ முந்திப் பாராதே - அது வருமுன் நீ அதைத் தெளிந்து கொள்ள முயற்சி செய்யாதே, பார்த்ததனைப் பார் - ஞானமானது உனக்குத் தோன்றும் அப்போது அதைக் காண்பாயாக, (பார்த்த + அதனை = தரிசனப்பட்ட அதனை)

## ஞானத்தைஅணையும் முறைமை

**களியே மிகுபுல னாக்கருதி ஞான**
**வொளியே யொளியா வொளி.**

பதவுரை: களியே மிகு புலன் ஆ(க்)கருதி - ஞானத்தைப் பெற்றபின் உண்டாகும் பேரானந்தத்தையே நீ நுகரும் பொருளாகக் கொண்டு ஞானஒளியே - ஞானமாகிய பிரகாசத்தையே, ஒளி ஆ(க) - அறி கருவியாகக் கொண்டு ஒளி - (அந்த இன்பத்துள் மூழ்கி உலக விடயங்கள் உன்னைப் பற்றாதபடி) ஒளித்து நிற்பாயாக.

## பிறபொருளைக் கருதாமல் ஞானவசமாய் நிற்றல்

**கண்டபடி யேகண்டு காணாமை காணாமை**
**கொண்டபடி யேகொண் டிரு.**

பதவுரை: கண்டபடியே கண்டு - ஞானம் உனக்கு எப்படி வெளிப்பட்டதோ அப்படியே நீ அதைக் கண்டு, காணாமை (காணாமை - அறியாமை) உலக விடயக் கருத்து) வந்து தோன்றாதபடிக்கு, கொண்டபடியே கொண்டிரு - அது உன்னை ஏற்றபடியே அதன் வயப்பட்டு இருப்பாயாக.



# ஓர் அரிசி

திருமுருக கிருபானந்தவாரியார்

ஆண்டவனை வழிபடுவதைக் காட்டிலும் அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழிபடுவோர்க்கு ஒரு பலன். அடியாரை வழிபடுவோர்க்கு இரட்டைப் பலன். ஏன்? அடியார்கள் உள்ளக் கோயிலில் ஆண்டவன் உறைகின்றான். ஆதலின் அடியார் வழிபாடு உயர்ந்தது என்றுணர்க.

ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்க்குச் சேராது. அடியார்க்குத் தந்தது ஆண்டவனைச் சேரும். அஞ்சல் தலைமை நிலையத்தில் இட்ட அஞ்சல், அஞ்சல் பெட்டிக்கு வராது; அஞ்சல் பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலையத்துக்குச் சேர்ந்துவிடும். அஞ்சல் தலைமை நிலையம் இறைவன்; அஞ்சல் பெட்டி அடியார்கள் என்றுணர்க.

**'படமாடக் கோயில் பரமர்க்கொன் றீயின்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்**
**படமாடக் கோயில் பரமர்க்கங் காமே.'**

என்பார் திருமூலர்.

ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடு ஆராதனை எனப்படும். அடியார்க்குச் செய்யும் வழிபாடு சமாராதனை எனப்படும். சம் ஆராதனை - சமாராதனை. சம் - நன்றாக; ஆராதனை - வழிபாடு. நன்றாக வழிபட்டு - சமாராதனை;

ஆதலால் காதலால் அடியார்க்குச் செய்யும் வழிபாடு மிகமிகச் சிறந்த பயனை நல்கும்.

ஒரு சமயம் நான் பெருந் தனவந்தர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் மிகவும் இனிமையாகப் பேசி மிகவும் உபசரித்தார். "ஐயா, உமக்கு இத்துணைப் பெருஞ் செல்வம் எவ்வாறு வந்தது?" என்று கேட்டேன். அத்தனவந்தர் செல்வ நலத்தால் மட்டும் சிறந்தவர் அன்று; கல்வி நலத்தாலும் சிறந்தவர். உடனே இரு வெண்பாக்களினால் எனக்கு விடையிறுத்தார்.

**கட்டத் துணியற்றுக் காந்துபசிக் கன்னமற்**
**றெட்டி மரமொத் திருந்தயான் - ஒட்ட**
**எறும்பிற்கு நொய்யரிசி யிட்டேன்; அதனால்**
**சிறிதுபொருள் ஈந்தான் சிவன்.**

**அப்பொருள் கொண் டீசன் அடியார்கட்**
**கன்னமிட்டேன்**
**ஒப்புவமை யில்லான் உளமுவந்தே - இப்பார்**
**அளகேசன் என்றே அதிசயிக்கச் செல்வம்**
**அளவிலா தீந்தான் அவன்.**

"உடுக்கத் துணியும் உண்ணச் சோறும் இன்றி எட்டி மரம் போல் வாழ்வு கசந்து இருந்த நான், வேறு ஒரு நற்பணியும் செய்ய இயலாது திகைத்து, எறும்பு வளைக்கு நொய்யரிசியிட்டு வந்தேன். அதனால் சிவபெருமான் சிறிது செல்வத்தை வழங்கியருளினார். சிவன் தந்த செல்வத்தைப் பாங்கியில் போடாமல் அப் பரமனுடைய அடியார்க்கு அன்னம் இட்டு வந்தேன். அதனால் அகம் மகிழ்ந்து அரனார் குபேரன் என்று என்னை எல்லோரும் மதிக்குமாறு அளவிறந்த செல்வத்தை வழங்கியருளினார்." இது அவர் கூறிய விடை.

ஒரு கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள். சூது வாது, வஞ்சனை, பொய், களவு முதலிய தீக்குணங்கள் அத்தனைக்கும் அவள் உறைவிடமாக இருந்தாள். தரும குணம் ஒரு சிறிதும் இல்லாத பொல்லாத கிழவி. அவள் வீட்டில் வாழும் எறும்புகளுக்கு நித்திய ஏகாதசி ஒன்றையும் சிந்தமாட்டாள். எறும்பின் வாயில் ஒரு நொய்யைப் பார்த்தால் உடனே ஓடி அதை எடுத்துப் பானையில் போட்டுக் கொள்வாள். அவள் வீட்டில் சாப்பிட்ட இலை வெளியில் விழுந்தால், சாப்பிடாத இலை மாதிரி சுத்தமாக

விழும். அதில் ஒரு துளி பசைகூட இராது. நாய்கள் வந்து பார்த்து ஏமாந்து போகும். நாம் செய்கின்ற வேலைகள் முழுவதையும் இந்தக் கிழவியே செய்துவிட்டாள் போலும் என்று பேசிக் கொள்ளும்.

பழைய சோற்றைப் பிசைந்து வடகம் போட்டுத் தின்பாள். கந்தல்களையெல்லாம் மடித்து மடித்துத் தலையணையாக்கிப் போட்டுக் கொள்வாள். கோயிலுக்குப் போவாள். சுவாமி கும்பிடுவதற்கு அன்று; அங்கு யாராவது விட்டிருக்கும் பாதரட்சைகளைக் கவர்ந்து வரும் பொருட்டே, யாராவது பிச்சைக்காரர்கள் அவளுடைய வீட்டுக்குச் சென்றால் சீறி விழுந்து கடிக்க வருவாள். அவர்கள் அப்படியே நடுங்கி ஓடிவிடுவார்கள்.

அவள் வாயில் மறந்தும் தெய்வத் திருநாமம் வராது. அவள் சிந்தையில் கருணைக்கு இடமே இல்லை. கருணைக் கிழங்காகத்தான் போகும். அவளை அந்த ஊரில் அனைவரும் வெறுத்து ஒறுத்தார்கள்.

ஒரு நாள் காலை, கிழவி நடையில் அரிசி தீட்டிக்கொண்டிருந்தாள். ஒரு சிறந்த சிவனடியார் வந்து,

**'அரஹர சிவசிவ அம்பல வாணா**
**பரம தயாபர வரத குணாளா'**

என்று பாடிக்கொண்டு நின்றார். "பாட்டி! ஒரு பிடி அரிசி போடு" என்றார்.

கிழவி, "ஏய்! உனக்கென்ன மமதை? எனக்கு என்ன வயது? எண்பதுதானே ஆயிற்று? பாட்டி என்கின்றாய், பச்சை வெட்டு மருந்து சாப்பிட்டுப் பல் போய்விட்டது. தேன் பட்டு மயிர் நரைத்து விட்டது. இது என்ன தருமசத்திரமா? உனக்கென்ன கேடு செக்குலக்கை மாதிரி இருக்கின்றாய் போ போ!" என்று விரட்டினாள்.

"பெரியம்மா! காதில் தங்கத்தால் செய்த பாம்புவடம் போட்டிருக்கின்றாயே. கழுத்து நிறையத் தங்கச் சங்கிலி. இவையெல்லாம் ஏது? சிவன் தந்ததுதானே! நான் பொன்னையும் பொருளையும் கேட்க வில்லையே. ஒரு பிடி அரிசி தானே யாசிக்கின்றேன்? அண்டாத் தொண்டையால் தகரடின் தட்டியதுபோல் கர்ச்சித்துப் பேசுகின்றனையே!

**பிறக்கும் பொழுது நொடுவந்த தில்லை, பிறந்து மண்மேல்**
**இறக்கும் பொழுது கொடுபோ வதில்லை இடைநடுவில்**
**குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது என்று கொடுக்கறியாது**
**இறக்கும் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே'**

அவ்வளவுதான், கிழவிக்குப் பொங்கி எழுந்தது சீற்றம். ஆலகால விஷம்போல் கொதித்தாள். "பிச்சைக்காரப் பயலே! என் வீட்டிலே வந்து இந்தத் தரித்திரம் பிடித்த மரணத்தைக் குறிக்கின்ற பாட்டைப் பாடுகின்றாயே!" என்று வைது, அரிசி தீட்டுகின்ற உலக்கையால் பத்திரகாளிபோல் அந்தச் சிவனடியாரை அடிக்க ஓங்கினாள்.

உலக்கையில் ஒட்டியிருந்த ஓர் அரிசி அவருடைய அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அதனைக் கிழவி பார்க்கவில்லை. பார்த்திருந்தால் எல்லா அரிசியும் என்னது என்று கொண்டிருப்பாள். அடியார் பிடித்தார் ஓட்டம்.

மற்ற வீடுகளுக்குச் சென்றார். சிறிது அரிசி கிடைத்தது. ஒரு மண்டபத்தில் அதைப் பொங்கித் தாம் வழிபடும் சிவலிங்கத்துக்கு நிவேதித்தார். பசியாறினார். சிவயோகத்தில் அமர்ந்தார். சிவஞானிகள் இன்றிருந்த ஊரில் நாளை இரார். அவர் தலயாத்திரைக்குச் சென்று விட்டார்.

நாளடைவில் கிழவி கண்ணை மூடிவிட்டாள். கால தூதர்கள் அவளைக் கட்டிப் பிடித்து யாதனா சரீரத்துடன் கொண்டுபோய்

அறக்கடவுளுக்கு முன்னே நிறுத்தினார்கள்.

அறக் கடவுள் கடுகடுத்த முகத்துடன், "சித்திரகுப்தா! இவள் கணக்கை எடுத்துப்படி" என்று கட்டளையிட்டார்.

சித்திரகுப்தன் கிழவியின் கணக்கை எடுத்துப் படித்தான். "எல்லாம் பாவந்தான். புண்ணியமே இல்லை. எறும்பு வளையில் நெருப்பை இட்டாள். பெரியோரை நிந்தித்தாள். கோயில் உடைமைகளைக் கவர்ந்தாள். கண்ணில்லாத வர்களுக்குக் காலணா போட்டு நாலணா எடுத்துக் கொண்டாள். சிவராத்திரி, சஷ்டி, ஏகாதசி முதலிய விரதநாள்களில் கூடத் தலையணைக்குப் பஞ்சடைக்கின்ற மாதிரி வயிறு புடைக்கத் தின்றாள். பேசிய யாவும் பொய், ஒரு நாள் ஒரு மகானை உலக்கையால் அடிக்கச் சென்றாள். உலக்கையில் ஒட்டிய ஓர் அரிசி அவருடைய கரத்தில் இருந்த அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அந்த ஓர் அரிசி சிவநிவேதனமாகி அச் சிவயோகியார் திருவயிற்றில் சேர்ந்தது. இந்த ஒன்றுதான் இவள் வாழ்நாளில் செய்த புண்ணியம். அதுவும் அபுத்தி பூர்வமாகச் செய்தது" என்றான்.

அறக்கடவுள், "நல்வினை அபுத்தி பூர்வமாகச் செய்தாலும் நன்மை பயக்கும்." தான் சிறிதேயாயிடினும் தக்கார் கை பட்டாக்கால், வான் சிறிதாப் போர்த்து விடும்" நெருப்பைத் தெரியாமல் மிதித்தாலும் சுடுந்தானே? ஆதலால் இந்த ஓர் அரிசிக்கு என்ன நலத்தை நுகரவேண்டும்? பார்த்துச் சொல்" என்றார்.

சித்திரகுப்தன் 'அண்ணலே, அந்த ஓர் அரிசி அடியாரின் திருவுதரத்தில் வீழ்ந்தபடியால், திருக்கயிலாய மலையிற் சென்று சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும்" என்றார்.

அறக்கடவுள், "புண்ணியம் கடுகளவு; பாவம் மலையளவு சூசீகடாக நியாயப்படி முதலில் புண்ணியத்தை நுகரட்டும். பிறகு பாவங்களை நுகரச் செய்யுங்கள். கிழவியின் பாவங்க ளுக்காக நரகில் இட்டு வாட்டி வருத்துங்கள். கிழவியின் வாயிலே தீயை வைத்து சுடுங்கள். கொதிக்கின்ற எண்ணெயில் இட்டுப் பொரியுங்கள்" என்றார்.

நமனுடைய தருமர்கள் கிழவியைப் பாசக்கயிற்றால் நன்றாகப் பிணித்துக் கொண்டு போய்த் திருக்கயிலாயத்தில் சிவ சந்நிதியில் நெடுந்தொலைவில் நிறுத்தினார்கள்.

"கிழவி, அதோ பார். சிவபெருமான்,"

பவளக் குன்று போன்று கோடி சந்திரப் பிரகாசமாம் வேத மந்திர பீடத்தில் வீற்றிருக்கும் சிவமூர்த்தியையும் இடப்பாகத்தில் மரகதக் கொடிபோல் வீற்றிருக்கின்ற இமயவல்லி அம்மையையும், இடையில் கனகச் சிறு குன்று போல் களிநடம் புரியும் கந்த வேளையும் கண்டாள் கிழவி. அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

"அப்பா எமதூதர்களே, உங்களுக்கு ஒரு கோடி வணக்கங்கள். ஓர் அரிசிக்கு இத்துணைப் புண்ணியம் வரும் என்று பாவியாகிய எனக்குத் தெரியாமல் போய்விட்டது. அந்தோ! என் வீட்டில் குதிர் நிறைய நெல்லும் பல மூட்டை அரிசியும் நெய்யும் பாலும் முந்திரிப் பருப்பும் பாதாம் பருப்பும் டப்பா டப்பாவாக இருந்தன. இத்தனையும் இப்போது எனக்கு உதவவில்லை. பெட்டி நிறையப் பணம் வைத்திருந்தேன். வட்டி மேல் வட்டி வாங்கினேன். பெட்டி மேல் பெட்டி அடுக்கினேன். எல்லாம் அங்கேயே நின்று விட்டன. அடியாரிடம் சேர்ந்த ஓர் அரிசிதான் இங்கு உதவுகின்றது. இத்தனைப் புண்ணியம் வரும் என்று யாரும் எனக்கு விவரமாகச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் என் வீடு தேடி வந்த அடியார்க்கு இருக்கையிட்டுப் பாலும் நெய்யும் அன்னமும் சொர்ணமும் அள்ளி வழங்கியிருப்பேன். சண்டாளியாகிய நான் கிள்ளிககூடத் தந்தேன் இல்லை. வாழ்நாள் முழுவதும் வீழ்நாளாகக் கழித்தேன். போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே? அப்பா, நீங்கள் நல்ல உத்தமர்கள், தேவருக்கும் மூவருக்கும் காணக் கிடைக்காத

கண்ணுதற் கடவுளைக் கண்ணாரக் கண்டேன். ஆனந்தம் கொண்டேன். கடவுளைக் கண்டு கைகூப்பித் தொழவில்லையானால் மேலும் பாவந்தானே! உங்களைத் தலையினால் வணங்குகின்றேன். சிறிது கட்டை அவிழ்த்து விடுங்கள். கைகூப்பி கும்பிடுகின்றேன். பிறகு என்னைக் கட்டிக் கொண்டுபோய் எரிவாய் நரகில் இருத்துங்கள்" என்று மிக மிக நடுங்கிய குரலுடன் இனிமையாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

இரக்கமே அறியாத எம தூதர்களின் உள்ளம் சிறிது உருகிற்று. 'குடலறுந்த குறுநரி எங்கே போகும்? என்று கருதிச் சிறிது கட்டை அவிழ்த்துவிட்டார்கள்.

கிழவி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து திருக்கோயிலுக்குள் சென்று கருணைக் கடலாகிய சிவபெருமான் திருவடியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டாள்.

"தேவதேவா! மஹாதேவா! தீனரட்சகா! கருணைக் கடலே! ஏழை பங்காளா! அருட்பெருஞ்சோதீ! அப்பனே! சிறியேன் அறியாமையால் பலவினைகளைச் செய்துவிட்டேன். அத்தனையும் பொறுத்து ஏழையைக் காத்தருள். காலதூதர்கள் இரும்புச் சம்மட்டியால் அடிப்பார்களாமே! கும்பீபாக நரகில் தள்ளிச் சித்திரவதை செய்வார்களாமே! தாண்டவம் புரியும் ஆண்டவனே1 வேண்டியவர்களுக்கு அருளும் தயாநிதியே. என்னை விரட்டியடிக்காமல் காத்தருள். குழந்தைகள் செய்த குற்றங்களுக்கு அம்மையும் அப்பனும் தண்டிக்கலாம். தெருவில் போகும் பயில்வானை விட்டுத் தண்டிக்க மாட்டார்களே! எமனிடம் கொடுத்து என்னைத் தண்டிக்காதே" என்று கூறி அழுதாள்; தொழுதாள்.

கருணை நிதியாகிய கண்ணுதற் பெருமான் அவள்மீது கருணை மழை பொழிந்தார். "அஞ்சேல்" என்று அபயம் அளித்தார்.

கிழவி சிவபெருமான் திருவடியின் அருகில் நிமிர்ந்து அமர்ந்தாள்.

இத்தனையும் கண்ட காலதூதர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். "கிழவி வெளியே வா" என்று அழைத்தார்கள்; கிழவி "வர முடியாது போங்கள்," என்றாள்.

காலதூதர்கள், "எம்பெருமானே! கிழவியைத் துரத்தி அனுப்புங்கள் இவள் கொடிய பாவி. நரகில் தள்ளி இவளைத் தண்டிக்க வேண்டும்" என்றார்கள்.

சிவபெருமான், "காலதூதர்களே! விண்ணளவு அடுக்கிய பஞ்சு பொறி நெருப்பினால் எரிந்து கரிந்து சாம்பரானாற் போல இவளுடைய பாவங்கள் யாவும் என்னைத் தீண்டியவுடனே நீறாகி விட்டன. இவளை நாம் மன்னித்து அருள் புரிந்தோம். நீங்கள் உங்கள் உலகுக்குச் செல்லுங்கள்" என்று அருளிச் செய்தார்.

காலதூதர்கள் "ஐயனே, எங்கள் தலைவனுக்கு என்ன சொல்வது? என்றார்கள்.

சிவபெருமான், "மார்க்கண்டேயர் வரலாற்றை நினைவுபடுத்துங்கள்" என்றார்.

காலதூதர்கள் மறைந்து எமனுலகம் போய் நடுங்கி அறக்கடவுளுக்கு முன் நின்றார்கள்.

அறக்கடவுள் "எங்கே கிழவி?" என்று கேட்டார். அவர்கள் நிகழ்ந்ததைக் கூறினார்கள்.

அறக்கடவுள் இறைவனுடைய கருணைத் திறத்தையும் அடியார் குட்சியில் வீழ்ந்த ஓர் அரிசி செய்த விந்தையையும் நினைத்து அதிசயம் அடைந்தார்.

❀

# குமார தந்த்ர ஆகமம் ஓர் அறிமுகம்

முனைவர் - கோ. விசயவேணுகோபால்
பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனம், பாண்டிச்சேரி

திருக்கோயில் வழிபாடுகள் பழமையான ஆகமநூல்களின் அடிப்படையில் செய்யப் படுகின்றன. இவ்வாகம நூல்கள் 20 நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் அச்சிடப் பெற்றன. அதற்கு முன்பு ஓலைச் சுவடிகளின் வழியே இவை ஆகமப் பாடசாலைகளில் மனனம் செய்யப்பெற்றன. 1955ஆம் ஆண்டு முதல் புதுவையிலுள்ள பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனம் இவ்வாகம ஏடுகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இச் சுவடிகள் பெரும்பாலும் கோயில்களில் பூசை செய்வோரிடமிருந்தும், கோயில்கள், மடங்கள் ஆகியவற்றினின்றும் தொகுக்கப் பெற்றன. இச்சுவடிகள் ஒரு குறிப்பிட்ட ஆகமத்தின் சில பகுதிகளது தொகுப்பாகவோ பல ஆகமங்களது பகுதிகளின் தொகுப்பாகவே அமைந்துள்ளன. 1. அடிப்படையான ஆகமங்களான காமிக. காரண ஆகமங்களின் வேறுபட்ட பாட வேறுபாடுகள் வெவ்வேறு சுவடிகளில் கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் ஆகம வாரியாகத் தொகுத்து மூல பாட ஆய்வுக்குட்படுத்திய பின்னரே இவற்றின் அடிப்படை அமைப்பு முதலானவை பற்றி அறிந்து கொள்ள இயலும், இப்பணியை இனித்தான் மேற்கொள்ள வேண்டும்.

1901 - 1930 கட்கிடையில் சில ஆகமங்கள் கிரந்த எழுத்துக்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவைதாம் பெரும்பாலும் கோயில் அர்ச்சகர் களிடையே இன்று காணப்படுகின்றன. காமிக, காரண, கிரண, சுப்ரபேத ஆகமங்கள் அடிப் படையானவை. இவை மூலாகமங்கள் எனப்படும். சில உபாகமங்கள், வேறு சில சோம சம்பு பத்ததி, அகோர சிவ பத்ததி என்ற பெயர்களில் (சில தனிக்கூறுகளின் அடிப்படையில்) வழங்கப்படும். இப்பதிப்புகள் பல குறைபாடுகளுடையவை. எடுத்துக்காட்டாக 1928 இல் சென்னையில் வெளியிடப்பட்ட சுப்ரபேதாகமத்தைச் சுட்டலாம். உலகத்தின் மிக அதிகமான ஆகமச் சுவடித் தொகுப்புகள் பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனத்தில் உள்ளன. 28 ஆகமங்கள் கொண்ட 12000 சுவடிகளும், 207 உபாகமங்களைப் பற்றிய சில சுவடிகளும் 18 பத்ததிகளைப் பற்றிய சுவடிகளும் உள்ளன. இவற்றுள் காமிக, காரணாகமங்கள் வடமொழி மூலம், பிரெஞ்சு விளக்கம் ஆகியவற்றுடன் வெளியிடப் பட்டுள்ளன.

## குமார தந்த்ர ஆகமம்

குமாரதந்த்ர ஆகமம் முருகன் வழிபாடு பற்றிக் கூறும் ஆகமமாகும். இவ்வாகமத்தின் சுவடிகள் 5 இந்நிறுவனத்தில் உள்ளன. குமாரதந்த்ர ஆகமத்தை அறிமுகம் செய்யும் போக்கிலேயே இக்கட்டுரை அமைந்துள்ளது. இவ்வாகமம் 28 சிவாகமங்களுள் இடம் பெறவில்லை. குமாரன் தந்த்ரம் எனப் பிரித்துக் குமாரக் கடவுளின் அருளைப் பெறும் பொருட்டுச் செய்யும் கிரியைகளின் விதிகளைக் கூறும் ஆகமம் எனப் பொருள் கூறுவர். சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த மயிலை அழகப்ப முதலியார் ராக்ஷச ஆண்டு ஆடி மாதம் இதனைப் பதிப்பித்துள்ளார். மொழி - சமஸ்கிருதம், எழுத்து - கிரந்தம்.

(மிகுதி அடுத்த இதழில் ........)



# கனிகளில் கனிந்த கதைகள்

## நாவல்பழம்:

இளம் வயதிலேயே முதுமையை வேண்டிப் பெற்றவள்தான் ஔவைப் பாட்டி, ஆண்டுகள் செல்லச் செல்ல அவள் உடலில் தள்ளாமையும் சேர்ந்தது. தமிழின் பெருமையைப் பல ஊர்களிலும் பரவச் செய்வதற்காக அவள் பயணம் மேற்கொண்டிருந்த போது, நடுவே நீண்ட தூரம் நடந்த களைப்பால் ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து ஓய்வெடுத்தாள்.

தன் அழகுத் தமிழுக்குக் கிடைத்த அங்கீகாரம் அந்த மூதாட்டியின் மனதில், "தமிழே என் ஆளுகையில்தான்!" என்ற எண்ணத்தை விதைத்திருந்தது. தன்னம்பிக்கை என்ற ஆரோக்கிய எல்லையை மீறித் தற்பெருமை நிழல் அவளது மனதில் உதித்தது.

ஔவை அமர்ந்த இடத்துக்கு நிழல் தந்து கொண்டிருந்த நாவல் மரத்தின் கிளையொன்றில் உட்கார்ந்திருந்தான் ஓர் இடைச் சிறுவன். உண்மையில் அவன் சிறுவன் அல்ல. சிங்கார வேலவன்தான்.

"என்ன பாட்டி, பசிக் களைப்பா நாவல் பழங்களைக் கீழே போடவா?" என்றான். பசித்த பாட்டியும் ஒத்துக்கொண்டாள்.

"சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேள்விகள் பிறந்தன இடைச்சிறுவனிடமிருந்து.

ஔவை திகைத்தாள், "நீ கூறியதன் பொருள் என்ன?" என்று கேட்க விடாமல் அவள் தமிழ் கர்வம் தடுத்தது. "சுட்ட பழமே போடு" என்றாள். சிறுவன் கிளையை உலுக்க, நாவல் பழங்கள் பொலபொலவென உதிர்ந்தன.

கீழே விழுந்த பழங்களின் மேல் சில மணல் துகள்களும் ஒட்டியிருக்க, அவற்றை ஊதினாள் ஔவை. மரத்தின் மீதிருந்து கலகலவென்ற சிரிப்புச் சத்தம், "என்ன பாட்டி, பழம் சுடுகிறதா? ஊதிச் சாப்பிடுகிறாயே?" என்றான் சிறுவன்.

அந்தத் தமிழ்ப் பழத்தை இந்தக் கேள்வி சுட்டது. வந்தவன் இடையனாயிருக்க முடியாது என்பதை உணர்ந்தாள். வேலவனும் சுய வடிவில் காட்சி தந்தான். ஔவையிடம் தற்காலிகமாகப் படிந்த தற்பெருமை நீங்கியது.

## எலுமிச்சம்பழம்:

பரீட்சித்து மன்னன் பாண்டவர்களின் வழித்தோன்றல், வல்லவன் மட்டுமல்ல நல்லவனும் கூட. ஆனாலும் போதாத வேளை வந்தது. மான் ஒன்றை வெகுதூரம் பின் தொடர்ந்து களைத்துப்போன அவன் அங்கு தவம் செய்து கொண்டிருந்த முனிவரைப் பார்த்து, "இந்தப் பக்கமாக ஒரு மான் சென்றதே, அது எந்தத் திசையில் ஓடியது?" என்று கேட்டான்.மன்னனின் கேள்வி, தியானத்திலிருந்த முனிவரின் காதில் விழவில்லை. காதில் விழுந்தும் கர்வத்தின் காரணமாக அவர் தனக்குப் பதில் தராததாகத் தவறாக எண்ணி விட்டான் மன்னன். செய்யத் தகாத காரியம் ஒன்றைச் செய்தான். அருகில் இறந்து கிடந்த பாம்பொன்றைத் தன் அம்பு நுனியால் எடுத்து முனிவரின் கழுத்தில் மாலை போல் சூடிவிட்டு அரண்மனை திரும்பினான்.

முனிவரின் மகனும் தவ வலிமை வாய்ந்தவன்தான். தன் குடில் திரும்பிய அவன் தன் தந்தையின் கழுத்தில் கிடந்த சர்ப்பத்தைப் பார்த்து நடந்ததை அறிந்து கொண்டான். "இன்னும் ஏழு நாட்களுக்குள் பாம்பால் உனக்கு மரணம் சம்பவிக்கும்" என்று மன்னனுக்குச் சாபமிட்டான். இதை அறிந்த மன்னன் கலங்கினான். தன்னைப் பாம்பெதுவும்

தீண்டாமலிருக்கப் பெரும் ஏரிக்கு நடுவே ஓர் அரண்மனையை நிறுவி அதில் தங்கினான். ஏழாம் நாள் முடியப் போகும் தருணம், "இனிக் கவலை இல்லை" என்று எண்ணியபடி சற்றே வெளியில் வந்தான் மன்னன். அப்போது நீரில் மிதந்து வந்தது ஓர் எலுமிச்சம்பழம், சற்றும் யோசியாமல் அந்தப் பழத்தைக் கையிலெடுத்தான் மன்னன்.

அடுத்த கணம் பழமாக வந்திருந்த தட்சகன் எனும் நாகம் அவனைத் தீண்டியது. மன்னனின் உயிர் பிரிந்தது. 'ஊழிற் பெருவலி யாவுள?'

## நெல்லிக்கனி :

ஆதிசங்கரர் பிரம்மசரிய ஆசிரமத்தில் இருந்த சமயம், பிட்சை எடுத்துச் சாப்பிட்டு வந்தார் அவர்.

ஒரு நாள் துவாதசி அன்று ஒரு வீட்டின் வாசலில் நின்று பிட்சை கேட்டார். அது ஒரு ஏழையின் வீடு. குடும்பத் தலைவன் வெளியே சென்றிருக்க, அவனது மனைவி ஜன்னல் வழியாக ஆதிசங்கரரைப் பார்த்தாள். வீடு தேடி வந்திருக்கும் அந்த தேஜஸ்விக்குப் பிட்சையிட அவள் மனம் பரபரத்தது. ஆனால் சோதனையாக வீட்டில் எந்தவிதப் பொருளுமில்லை. ஒரே ஒரு நெல்லிக்கனி மட்டும் இருந்தது. அதுவும் வதங்கியது. மிகவும் சங்கோஜத்துடன் அதை எடுத்து வந்து ஆதிசங்கரரின் திருவோட்டில் இட்டாள் அந்த இல்லத்தரசி.

அந்த ஓரே நெல்லிக்கனியையும், பிட்சையிட்டவளின் முக பாவத்தையும் கொண்டே அந்த ஏழைமை நிலையைப் புரிந்து கொண்டார் சங்கரர். அந்தக் குடும்பத்தின் ஏழைமையைப் போக்குமாறு லட்சுமிதேவியைப் பிரார்த்தித்தார். கனகதாரா ஸ்தோத்திரம் பிறந்தது. லட்சுமிதேவி அருள்புரிய, அந்த ஏழையின் இல்லத்தில் தங்கக் காசுகள் மழையாகப் பொழிந்தன.

உள்ளன்போடு தகுதியானவர்களுக்கு அளிக்கப்படும் எந்த தானத்துக்கும் உடனடியாகப் பெரும்பலன் கிடைக்கும் என்பதற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டு இந்தச் சம்பவம்.

## மாங்கனி :

கைலாயத்தில் கால் படக்கூடாது என்பதற்காகத் தலைகீழாக நடந்து சென்றவர் காரைக் காலம்மையார். அவர் வாழ்வுப் பாதையையே தலைகீழாக மாற்றிய பெருமை மாம்பழத்திற்கு உண்டு!

வணிகர் ஒருவரின் மனைவியாக இல்லறம் நடத்தி வந்தவர் புனிதவதி. ஒரு நாள் இரு மாங்கனிகளைத் தம் மனைவிக்குக் கொடுத்தனுப்பினார் அவர் கணவர். மாங்கனிகளை அடுக்களைக்குள் வைத்துவிட்டு வெளியில் வந்த புனிதவதி வாசலில் ஒரு சிவனடியார் பிட்சைக்கு நின்றிருப்பதைக் கண்டார். 'கணவருக்கு ஒரு மாம்பழத்தை வைத்துவிட்டு என் பங்கான மற்றொரு மாம்பழத்தை இவருக்கு அளிப்பேன்' என்று எண்ணி, அப்படியே செய்தார். சிவனடியாரும் மகிழ்ச்சியோடு மாங்கனியோடு சென்றார்.

மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்த கணவருக்கு மீதியிருந்த மாம்பழத்தை இட்டு அமுது படைத்தார் புனிதவதி. "சுவையான மாம்பழம் இன்னொரு மாம்பழத்தையும் எனக்கே இடு" என்றான் கணவன் உரிமையுடன். கணவன் சாப்பிடக் கேட்ட ஒரு பொருளை இல்லையென்று சொல்லும் நிலை வந்ததே என்ற கழிவிரக்கம் தோன்ற ஈசனைத் தொழுதார் புனிதவதி. பரமசிவன் ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார். சமையலறையில் புதிதாக ஒரு மாங்கனி காட்சியளித்தது. இறைவனுக்கு நன்றி கூறிய அவர், அந்தப் பழத்தைக் கணவருக்குப் படைத்தார். அதை ரசித்து உண்டவனின் முகம் சந்தேகத்துக்கு மாறியது.

"சற்று முன் உண்ட மாங்கனியை விட இது மிகவும் வித்தியாசமான, அற்புதச் சுவை கொண்டதாக இருக்கிறதே! இது எப்படி உனக்குக் கிடைத்தது?" என்று அவன் கேட்க,

நடந்ததை நடந்தவாறே கூறினார் புனிதவதி. கணவன் நம்பமுடியாமல் தவிக்க, கண் மூடி இறைவனை மனமாரத் தியானித்தார் புனிதவதி. மீண்டும் அவள் முன் ஒரு மாங்கனி தோன்றியது. உடனே தன் மனைவியைத் தெய்வமாகக் கருதி வணங்கினான் வணிகன். புனிதவதிக்கும் உலக வாழ்க்கையின் அநித்தியம் புரிந்தது. சிவபக்தி யிலேயே தன் மீதிக் காலத்தைக் கழித்தார் அவர். காரைக்கால் அம்மையார் என்ற பெயருடன் பின்னாளில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகத் தனியிடமும் பெற்றார்.

**நேத்திரம்பழம் :**

குழந்தைக் கண்ணன் உறையும் ஊர் குருவாயூர். குழந்தைகளின்பால் தான் கொண்ட அன்பை இறைவன் உணர்த்திய நிகழ்ச்சி இது.

கோயில் அர்ச்சகர் ஒரு நாள் தன் இளம் வயது மகனையும் குருவாயூர்க் கோவிலுக்கு அழைத்து வந்திருந்தார். இரண்டு நேந்திரம் பழங்களைத் தாம்பூலத்துடன் வைத்து இறைவ னுக்கு நைவேத்தியம் செய்தார். கர்ப்பூர ஆரத்திக்கு முன் அவர் கண்களை மூடி இறைவனைத் துதித்தார். அப்போது அவரது மகனின் கண்கள் அந்தப் பழங்களின் மீதே பதிந்திருந்தன. பசியோடிருந்த அந்தப் பாலகன் ஒரு பழத்தை எடுத்துப் புசித்து விட்டான். கண் திறந்த அர்ச்சகர் கடும் கோபம் கொண்டார். "என்ன அபசாரம் செய்து விட்டாய்? இந்தப் பிரகாரத்தை நூறுமுறை சுற்றிவா. அதுதான் உனக்குத் தண்டனை" என்றார்.

கண்களில் நீர் சோர அந்தச் சிறுவன் பிரகாரத்தைச் சுற்றத் தொடங்கினான். தந்தை அவன் சுற்றுக்களின் எண்ணிக்கையைக் குறித்துக் கொண்டே வந்தார். ஐம்பது முறை அந்தச் சிறுவன் வலம் வந்தவுடன்... இதென்ன ஆச்சரியம்! அர்ச்சகர் தம் கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டார். சாட்சாத் குருவாயூரப்பனே பிரகாரத்தை வலம் வந்து கொண்டிருந்தது போல் அவருக்குப் பட்டது. அர்ச்சகர் மனம் நொந்து கதற, சந்நிதியிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"ஒரு பழத்தைச் சாப்பிட்டதற்காக உன் மகனுக்குத் தண்டனையென்றால் மற்றொரு பழத்தை அங்கீகரித்துக் கொண்ட நானும் தானே அந்தத் தண்டனையில் பாதிப் பங்கைப் பெற வேண்டும்!" என்றது அந்தக் குரல். இளம் தளிர் களிடம் இறைவனுக்குத் தனிக் கருணை உண்டு என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது இச்சம்பவம்.

**இலந்தைப்பழம்:**

சபரி முதியவள், இனியவள், பக்தியில் கனிந்தவள்; பக்தியிலும், அன்பிலும் மட்டுமே பணக்காரியான அவள் தன் குடிசை வாசலில் நின்று கொண்டு கண்களைச் சுருக்கியபடி யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பது வாடிக்கையாகிவிட்டது. அன்று அவளது முகத்தில் அதீத ஒளி, அவள் யாருக்காகக் காத்திருந்தாளோ, அந்த விருந்தாளிகள் வந்து விட்டார்களோ! ஆம், ராமனும், இலக்குவனும் அவளது குடிலுக்கு விஜயம் செய்கிறார்கள். உளம் கொள்ளா உவகையுடன் அவர்களை வரவேற்கிறாள் சபரி.

விருந்தோம்பலுக்கு அடிப்படைத் தேவை மனம் நிறைந்த வரவேற்பும், சுளிக்காத முகமும்.... அவற்றிற்குச் சபரியிடம் பஞ்சமே இல்லை.

விருந்தோம்பலின் இன்னொரு தேவையான விருந்து? உள்ளே சென்ற சபரி இரு தட்டுக்களுடன் வெளிவருகிறாள். அவற்றில் வெறும் இலந்தைப் பழங்கள்தான். பழங்களைச் சுவைத்துப் பார்த்து அவற்றில் இனிப் பானவற்றை மட்டுமே ராமனுக்காகச் சேகரித்து வைத்திருந்தாள். அந்த மூதாட்டி. ராமன் கருணையோடும் மன நெகிழ்வோடும் அவற்றை உண்ணுகிறான். சுக்ரீவன் இருக்கும் இடத்தை அந்தத் தெய்வீகச் சகோதரர்களுக்குக் காட்டிய அவள், தன் பிறவிப் பயனையே பெற்று விட்டதாக மகிழ்வெய்துகிறாள்.; இறையடியில் இணைகிறாள்.

நன்றி : கலைமகள்

# புலாலுண்ணாமை

க. சிவபாதசுந்தரம், பி.ஏ.,

### இருக்கு வேதம்

"மாமிசத்தை விலக்கி மற்றைய பதார்த்தங்களைச் சுத்திசெய்து சமைத்து உண்பவர்கட்கு நல்ல சித்திகள் உண்டாகும்."

"யாதோருயிரையுங் கொல்லாத இல்வாழ்வானுக்கு மேம்பாட்டைக் கொடு"

### யசுர் வேதம்

"கடவளே எல்லாப் பிராணிகள் மீதும் அன்பாக இருக்கவும், அவை என்மீது அன்பாயிருக்கவும் அருள் செய்க."

### பதி பசு பாச விளக்கம்

**கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்**
**மங்குல்போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும்**
**சங்கையில் லாதஞான தத்துவ முணர்ந்திட்டாலும்**
**பொங்குறு புலால்புசிப்போன் போய்நர கடைவனன்றே.**

### மனித சரீரத்தின் அமைப்புக்கு மாமிச போசனம் பொருந்தாது

கடவுள் மூன்று வகையான சர உயிர்களைப் படைத்திருக்கிறார் அவற்றுள் ஒருவகை உயிர்கள் மாமிசஞ் சாப்பிடத்தக்க சரீர அமைப்பை உடையவை. வேறொரு வகை உயிர்கள் தாவரங்களைச் சாப்பிடத்தக்கவை. மற்ற வகை உயிர்கள் மாமிசம் தாவரம் இரண்டையுஞ் சாப்பிடத்தக்கவை. சிங்கம், புலி முதலிய மிருகங்கள் இறைச்சியை மாத்திரம் சாப்பிடத்தக்கவை. மாடு, ஆடு, குரங்கு யானை முதலிய மிருகங்கள் புல்லு இலை தானியம் காய் பழம் முதலிய தாவர வர்க்கங்களை மாத்திரந் தின்னத்தக்கவை. நாய் பூனை முதலிய சில மிருகங்கள் மாமிசம் தாவரம் என்னும் இருவித போசனங்களையும் உண்ணத் தக்கவை. (சர உயிர் - உலாவக் கூடிய உயிர்)

சிங்கம், புலி முதலிய மிருகங்களுடைய பற்களையும் நகங்களையும் குடல்களையும் பார்த்தால், அவை மாமிசமே சாப்பிடுவதற்குக் கடவுளாற் படைக்கப்பட்டன என்று அறியலாம். இந்த மிருகங்களுடைய நீண்ட கூரிய நகங் களும், வாள் போன்ற கூரிய பற்களும், மற்றை யவற்றினும் மிக நீண்ட வேட்டைப் பற்களும் மாமிசத்தைக் கிழித்துத் தின்பதற்கு ஏற்றவை. அன்றியும் இந்த மிருகங்களுடைய குடல்கள் குறுகியிருக்கின்றன. மாமிசம் விரைவாக அழுகி விஷமாகுந்தன்மையை உடையது. அது சரீரத் திலே அதிக நேரமிருந்தால் அதன் விஷம் பரவி விடும். அது விரைவாக உடம்பிலிருந்து கழிந்து போகும் படியாகவே மாமிசந் தின்னும் மிருகங்களின் குடல்கள் சிறியனவாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

தாவரங்களை உண்ணும் பசு முதலிய வற்றின் பற்களோ தாவரத்தை மாத்திரஞ் சாப்பிடக்கூடியனவாக உண்டாக்கப்பட்டிருக்கின் றன. இவைகளின் பற்கள் சிங்கம், புலி முதலியவற்றின் பற்களிலிருந்து மிகவும் வித்தியாசமாக இருக்கின்றன; புலி, சிங்கங்க ளுக்குள்ள கூரிய நகங்கள் இவைகளுக்கு இல்லை. தாவரங்களையே தின்னும் பசு முதலிய மிருகங்களின் குடல்கள் மிகவும் நீண்டிருக்கின்றன. தாவர போசனம் விரைவிற் பழுதுபடாது. அது நெடுநேரஞ் சரீரத்திலி ருந்தால் அதன் சத்துப் பகுதிகள் சரீரத்தில் அதிகமாகச் சேரும். ஆதலால், அவைக ளுடைய குடல்கள் நீளமாயிருக்கின்றன. மனிதனுடைய சரீரத்தின் அமைப்பு, தாவரங் களையே தின்னும் குரங்கின் சரீர அமைப்பை ஒத்திருக்கிறது. குரங்குக்குப் போல மனிதனுக்கும் வேட்டைப் பற்கள் மற்றைப் பற்களினளவாய் இருக்கின்றன. தாவரந் தின்னும் மிருகங்களின் குடல் நீண்டிருக்கின்றது போல மனிதனுடைய குடலும் நீண்டிருக்கின்றது.

(மிகுதி அடுத்த இதழில் ........)

Regd No. QD/65/News 2006 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*Printed By: Chemax Prints (PVT) LTD, No: 07, Charles Place, Dehiwala.*
*email@chemaxprints.com Tel:2723963, Fax:94-11-2737127*